உறுப்பினர் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்த தன் பேரில் மாவட்ட ஆட்சித் தலைவர், தோட்டக் கலை இயக்குநர், ஆகியவர்களை அழைத்துப் பேசி, ஆக்கிரமிப்பாளர்கள் யாராக இருந்தாலும் அகற்றி, அந்த நிலம் பழப் பண்ணைக்கே சொந்தமாக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறேன். வருகின்ற 27ஆம் தேதி கூட ஆத்தூருக்குச் செல்ல இருக்கின்றேன். அப்பொழுது மாண்புமிகு உறுப்பினரோடு அந்தப் பழப் பண்ணைக்குச் சென்று ஆக்கிரமிப்பாளர்கள் இருக்கிறார்களா என்று பார்த்து, அப்படியிருந்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

பொதுப்பணித்துறை காவிரிக் கோட்டத்தில் முறைகேடு.

* 2581 திரு. இரெ. இராசமாணிக்கம் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1986–87-ல் பொதுப்பணித்துறை காவிரிக் கோட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட வேலைகளில் முறைகேடு நடைபெற்றதாக அரசுக்கு புகார் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே,

(அ) ஆம். புகார் வந்துள்ளது.

(ஆ) 1986-87-ல் காவிரி கோட்டத்தில் மேற்கொள்ளப் பட்ட வேலைகளில் நடைபெற்ற முறைகேடுகள் குறித்து விழிப்பு மற்றும் கண்காணிப்புத் துறையில் (Vigilance and Anti-corruption) ஆய்வு நடத்தப்பட்டு வருகிறது.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1986-87-இல் பொதுப்பணித் துறை காவிரிக் கோட்டத்தின் மூலமாக நடைபெற்ற அந்த வேலைகளில் எந்தெந்த ஆறுகளில் அல்லது வாய்க்கால்களில் தூர் வாரிய பணியில் முறைகேடுகள் நடைபெற்றன? நெய்வேலி காட்டாமணி என்ற ஒரு செடியை வெட்டுவதாகச் சொல்லி, வெட்டாமலேயே பில் போடப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறதே, அவையெல்லாம் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றனவா? அந்த வேலையினுடைய மதிப்பு எவ்வளவு? அதில் சம்பந்தப்பட்ட அதிகாரி

1990 மார்ச் 23]

கள் எத்தனைபேர் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள்? அவர்கள் மீது தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறதா என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

9-55 மணி.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவரவர்களே, 1986-87ஆம் ஆண்டு தஞ்சை மாவட்டம் காவிரிக் கோட்டத்தின் பாசனப் பராமரிப்புக்கு ஒதுக்கப்பட்ட பணிகளில் முறைகேடுகள் நடந்துள்ளதாக அரசினுடைய கவனத்திற்கு வந்தது. அந்த முறைகேடுகளைப் பற்றி விசாரிக்க ஒரு அதிகாரி அனுப்பப்பட்டார். அவர் விசாரணையில், முறைகேடுகள் நடந்திருப்பதற்கான முகாந்திரங்கள் உண்டு என்று தெரிந்தவுடன், மேற்கொண்டு, தீவிரமாக, ஆழ்ந்து விசாரிக்க அது விஜிலன்ஸ் அன்ட் ஆண்டி கரப்ஷனுக்கு அனுப்பப்பட்டது. எனவே, அந்தக் குழு இப்பொழுது விசாரித்துக் கொண்டிருக்கிறது. இதிலே, வாய்க்கால்களுக்குக் கரை அமைத்தல், தூர் எடுத்தல், கட்டுமானப் பணிகளைச் செய்தல், காட்டாமணி வெட்டுதல் ஆகியவற்றில் முறைகேடுகள் நடந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. வேலை நடக்காமலேயே வேலை நடந்ததாக நெய்வேலி காட்டாமணி வழக்கு என்ற ஒன்று தஞ்சை மாவட்டத்தில் இருந்தது. நெய்வேலி காட்டாமணி ஊழல் என்று அதைத் தஞ்சை மாவட்டத்திலே பிரபலமாக அழைப்பார்கள். செடியை வெட்டாமலேயே பில்லை வெட்டிவிட்டார்கள். எவ்வளவு பணம் என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்டால் கிட்டத்தட்ட ரூ. 66.67 லட்சம் அத்தகைய முறைகேடுகளுக்கு இலக்காகியிருக்கும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. முழுமையான விவரம்—அந்த விஜிலன்ஸ் ரிப்போர்ட் கிடைத்ததற்குப் பிறகுதான் எந்தெந்த கால்வாயிலே எவ்வளவு முறைகேடுகள் நடந்திருக்கின்றன என்பது தெரியும். அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்று கேட்டார். திரு. எஸ். கோவிந்தசாமி, திரு. நடராசன், செயற்பொறியாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. திரு. கோவிந்தசாமி, நீதிமன்றத்திற்குச் சென்று தற்காலிக வேலை நீக்கத்தை எதிர்த்து வழக்காடி வேலையிலே சேர்ந்திருக்கிறார். திரு. நடராசனும் அப்படித் தன்னை சேர்க்க வேண்டும் என்று உயர் நீதி மன்றத்திற்குப் போனார். ஆனால் அதை எதிர்த்து அரசு வழக்காடுகின்றது. திரு. கே. சி. நடராசன் என்பவர் எஸ்.இ. அவர் 12—3—1987 முதல் தற்காலிக வேலை நீக்கத்தில் இருக்கிறார்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் தூர் வார்வதற்காகச் சொல்லி வாராமல், வாய்க்கால்கள் வெட்டுவதாகச் சொல்லி வெட்டாமல் கிட்டத்தட்ட 67 லட்சம் ரூபாய் அதிலே மோசடி நடந்திருப்பதாக அமைச்சர் அவர்கள் மூலமாக இங்கு தெரிகிறது.

அதிலே சம்பந்தப்பட்ட ஆறுகள் நாட்டாறு, தென்கோரையாறு, வட கோரையாறு, அரசலாறு, நூலாறு, கீர்த்தமான் ஆறு, வாஞ்சியாறு போன்ற ஆறுகள், அதனுடைய கிளை வாய்க்கால்கள் கிட்டத்தட்ட நான்கு ஆண்டுக்காலமாகத் தூர் வாரப்படாமல் மேடாகிப் பாசனம் செய்ய முடியாமல் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு பிரத்தியேக அனுமதி கொடுத்து அரசாங்கத்தின் மூலமாக வழக்கு தொடர்ந்து நடக்கட்டும். பொதுப்பணித் துறை மூலமாக இந்தாண்டு வேலை செய்வதற்கு பிரத்தியேக அனுமதி அரசு வழங்குமா, வழங்க வேண்டும் என்று, நான் கேட்டுக் கொள்வதோடு, அமைச்சர் அவர்கள் மூலமாக அதற்கான பதிலையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கால்வாய்கள், இந்த வழக்கை முன்னிட்டு தூர் வாரப்படாமல் இருக்கின்றன என்ற செய்தி அறிந்து நானே அந்த வாய்க்கால்களைச் சென்று பார்வையிட்டேன். வழக்கு ஒரு பக்கத்திலே நடக்கட்டும், அதிலே நமக்கு ஒன்றும் மாறுபட்ட கருத்தில்லை. அந்த வாய்க்கால்களைத் தூர் வார, காட்டாமணியை வெட்டுகிற வேலையைச் செய்ய அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ளும். அதற்கு வேண்டிய முயற்சிகளில் அரசு இறங்கியிருக்கின்றது.

பாலம் கட்டுதல்

*** 3317 திரு. எம் தங்கவேல் :**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருச்சி மாவட்டம், முசிறி தொகுதியில் சமயபுரம் அருகே உள்ள மாணிக்கபுரத்தில் பாலம் கட்டும் பணி எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலம் அமைக்கும் பணிகளை குளித்தலை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த தொழில் பட்டறை மூலம்செய்வதற்காக பணி ஆணை (work order) மண்ணச்சநல்லூர் ஊராட்சி ஒன்றிய ஆணையரால் அளிக்கப்பட்டுள்ளது.

TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்